## யூலை- 22 - சனி

### புனித மேரி மக்டலின் (மகதல மரியா)

### ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: ஏனெனில் அவர் நல்லவர், திபா. 136:1

### முதல் வாசகம் : விடுதலைப் பயணம்12 : 37 – 42

இஸ்ரயேல் மக்கள் இராம்சேசிலிருந்து சுக்கோத்துக்கு இடம் பெயர்ந்து சென்றனர். இவர்களில் குழந்தைகள் தவிர நடந்து செல்லக்கூடிய ஆடவர் மட்டும் ஏறத்தாழ ஆறு லட்சம் பேர் ஆவர்.மேலும் அவர்களோடு பல இனப் பெருந்திரளும், ஆட்டுமந்தை மாட்டுமந்தை என்று பெருந்தொகையான கால்நடைகளும் புறப்பட்டுச் சென்றன.எகிப்திலிருந்து கொண்டுவந்த பிசைந்த மாவைக்கொண்டு அவர்கள் சுட்டது புளிப்பற்ற அப்பங்கள். ஏனெனில் மாவு இன்னும் புளிக்காமலிருந்தது. அவர்கள் எகிப்திலிருந்து துரத்தப்பட்டதாலும், சற்றும் தாமதம் செய்ய இயலாமற்போனதாலும் தங்களுக்கென வழியுணவு தயாரித்து வைத்திருக்கவில்லை!எகிப்தில் குடியிருந்த இஸ்ரயேல் மக்கள் அங்கு வாழ்ந்த காலம் நானூற்று முப்பது ஆண்டுகள்!நானூற்று முப்பதாம் ஆண்டு முடிவுபெற்ற அதே நாளில் ஆண்டவரின் படைத்திரள் எல்லாம் எகிப்து நாட்டினின்று வெளியேறியது.எகிப்து நாட்டினின்று அவர்களை வெளியேறச் செய்தபோது ஆண்டவர் விழித்திருந்த இரவு இதுவே! தலைமுறைதோறும் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் ஆண்டவருக்கென்று திருவிழிப்பு கொண்டாடவேண்டிய இரவும் இதுவே.

**பதில்பாடல் :** என்றென்றும் உள்ளது உமது பேரன்பு

### நற்செய்தி : யோவான் 20:1– 2,11-18

வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார் கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார்.எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, ”ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டுபோய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!” என்றார். மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்தார் அழுது கொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார்.அங்கே வெண்ணாடை அணிந்த இருவானதூதரை அவர் கண்டார். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.அவர்கள் மரியாவிடம், ”அம்மா, ஏன் அழுகிறீர்?” என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், ”என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ எனக்குக் தெரியவில்லை” என்றார்.இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டார். ஆனால் அங்க நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்து கொள்ளவில்லை.இயேசு அவரிடம், ”ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?” என்றுகேட்டார். மரியா அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், ”ஐயா, நீர் அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்” என்றார்.இயேசு அவரிடம், ”மரியா” என்றார். மரியா திரும்பிப் பார்த்து, ”ரபூனி” என்றார். இந்த எபிரேயச் சொல்லுக்கு ”போதகரே” என்பது பொருள்.இயேசு அவரிடம், ”என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், ”என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்” எனச்சொல்” என்றார்.மகதலா மரியா சீடரிடம் சென்று, ”நான் ஆண்டவரைக் கண்டேன்” என்றார் தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்.

**தியானம்:** அன்னையாம் திரு அவையோடிணைந்து ஆண்டவர் இயேசுவின் சீடத்தி புனிதை மதகலா மரியாவிற்கு விழரவெடுக்கின்றோம். மனிதர்களான நாம் அடுத்தவரை அன்புசெய்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம். கணவன் மனைவியிடையே வாழ்விலும், தாழ்விலும் இணைந்து வாழும் அன்பு.. பெற்ற பிள்ளைக்கு பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த அன்பு. சகோதரங்களிடையே தொப்புள் கொடி இணைப்பால் பிரிக்க முடியாத அன்பு. அவ்வாறே, இயேசுவையும் பல்வேறு விதங்களில் அன்பு செய்தவர்களில் ஒருவராக மதகலா மரியாவை சந்திக்கின்றோம். மதகலா மரியா ஆண்டவர் இயேசுவில் வைத்திருக்கும் அன்பை நாம் அளவுகோல் கொண்டு அளவிட முடியாது. ஏனெனில் கல்லறைக்குள் அடக்கம் செய்யப்பட்ட ஆண்டவர் இயேசுவின் திருவுடலைச் சந்திக்க அதிகாலையிவ் அதாவது இருள் நீங்கும் முன்னரே (யோவான்20:1) சென்றிருந்தார் என்பதிலிருந்து நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவை அடையாளம் காணாது அவர் கலங்கியதிலிருந்து அன்பின் ஆழம் இன்னமும் உறுதிசெய்யப்படுகிறது. ஆயினும் ‘‘மரியா‘‘ என்ற குரல் கேட்டதும் ‘‘போதகரே‘‘ என அடையாளம் கண்டு கொண்டவருக்கு இயேசு உயிர்த்து விட்டார் என்ற செய்தியை அறிவிக்கும் சீடத்துவப் பணி வழங்கப்படுகின்றது. இவ்வாறே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு எம்மிடையேயும் வாழுவது மட்டுமல்ல, எமது வாழ்வின் ஒவ்வொரு சம்பவங்கள் வழியாகவும் எம்மைப் பெயர் சொல்லியழைத்து எம்மோடு பேசுகின்றாரென நம்புவோம். உயிர்த்தெழுந்த ஆண்டவரை நாமும் அடையாளம் கண்டுகொள்வது மட்டுமல்ல, இயேசு உயிரோடு வாழுகின்றாரென அறிவிக்க அழைக்கப்பட்டுள்ளோம். எனவே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு நம்மோடு வாழ்வதற்கு நாமும் மதகலா மரியா போன்று காரிருள் நிறைந்த எமது வாழ்வின் விடியலுக்குள் ஆண்டவர் இயேசுவைத் தேடவேண்டும். அவர் எம்மைப் பெயர் சொல்லி அழைப்பதனை நாம் காது கொடுத்துக் கேட்பது மட்டுமல்ல அவரை ‘‘ஆண்டவரே‘‘ எனப் பணிவோடு அழைக்க நாம் தயாராக இருக்கின்றோமா?